O.S.42/2019
PW1 – ராசாத்தி
நாள் 09.01.2026, 12.50 P.M.

**1 மற்றும் 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** எனது தரப்பில் கூடுதலாக 1 முதல் 24 ஆவணங்களை தாக்கல் செய்ததற்காக அனுமதி கோரி தாக்கல் செய்த மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ததற்கான கால தாமதம் ஏன் ஏற்பட்டது என்றால் முதுகுளத்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ஆவணங்களை எடுத்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக காலதாமதம் ஏற்பட்டது. மேற்படி கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 19வது ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2. கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 24 ஆவணங்கள் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். மேற்படி 19வது ஆவணமானது இந்த சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றாலும், வாகைக்குளம் கிராமத்தின் சொத்து சம்மந்தமானது என்றால் சரியல்ல. நான் கூடுதலாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்பதாலும், இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி